# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,418 — 1924 ம் ஹூ புரட்டாதிமீ 19 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் விளம்பரம்.

---

இத்துடன் அணைத்திருக்கும் இடாப்பிற் பூரணமாய் விபரிக்கப்பட்டிருக்கிற 1811 ம் ஆண்டின் 3 ம் இலக்க ஒழுங்கினதும் 1843 ம் ஆண்டின் 18 ம் இலக்கச் சட்டத்தினதும் ஏற்பாடுகள் இன்னும் பெலமுடையவைகளாய் வழங்கிவருகின்றனவென்று சகலரும் அறியும்படி இத்தால் விளம்பரப்படுத்தப்படுகின்றது.

சொல்லப்பட்ட ஏற்பாடுகளுக்கு விரோதமாய் ஏதும் குற்றம் அல்லது குற்றங்கள் செய்யாதபடி இத்தாற் சகலரும் எச்சரிக்கப்படுகிறார்கள். எங்ஙனமாயினும், விலக்கப்பட்ட எல்லைக்குள் கரவலை என்று சொல்லப்படும் வகுப்பைச்சேர்ந்த கரையில் உபயோகிக்கப்படும் வலைகளை வைத்திருத்தலைத் தடுக்கும் குறித்த ஒழுங்கினதும் குறித்த சட்டத்தினதும் ஏற்பாடுகளை வலியுறுத்தும் கருத்தில்லை.

உத்தம தேசாதிபதி அவர்களின் கட்டளைப்படி,

சிசில் கிளமென்தி,
கலோனியல் சக்கிறுத்தார்.

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1924 ம் ஹூ புரட்டாதிமீ 12 ந் உ.

---

### மேற்சொல்லப்பட்ட இடாப்பு.

மகத்துவந்தங்கிய இராசா அவர்களுடைய இலங்கையிலிருக்கும் முத்துச்சிப்பிப் பார்களின் பாதுகாப்புக்காகச் செய்யப்பட்ட 1811 ம் ஆண்டின் 3 ம் இலக்க ஒழுங்கு.

முத்துச்சிப்பிப் பார்களிருக்கிற இடத்திலே காணப்படுவதற்கு யாதொரு தேவையும், நீதியான காரணமும் இல்லாமல் அவ்விடங்களுக்கு காற்று அமைதியாயிருக்குங் காலங்களில் அடிக்கடி போகுந் தோணிகள், மரக்கலங்களினால் இத்தீவின் முத்துச்சிப்பிப் பார்களில் கொள்ளையடிக்கப்படுகிறதென்று சமுசயப்பட நியாயமிருக்கிறபடியால்:—

இதற்குப்பின் எந்த வருஷத்திலும் ஜனவரி (தை) மீ 10 ந் தேதிக்கும் ஏப்பிறில் (சித்திரை) மீ முடிவுக்கும் இடையிலும் அல்லது அக்ரோபர் (ஐப்பசி) மீ 1 ந் தேதிக்கும் நவம்பர் (கார்த்திகை) மீ முடிவுக்கும் இடையிலும் எந்தத் தோணி அல்லது மரக்கலமாகுதல், இத்துடன் அணைத்திருக்கும் இடாப்பில் விபரிக்கப்பட்டபடி, முத்துச்சிப்பிப் பார்களின் எல்லைக்குள், காற்று மழை முதலிய வசதியீனங்களுக்குத் தக்கபடி அத்தோணி அல்லது மரக்கலம் செல்லவேண்டிய இடங்களுக்குச் செல்லாமல், நங்கூரமிட, அல்லது வட்டமிட்டோடக் காணப்பட்டால் அதி உத்தம தேசாதிபதியவர்களிடமிருந்து, இவ்வொழுங்குகளின் நோக்கமாக, கட்டளை அல்லது அதிகாரம் பெற்றவர் அல்லது பெற்றவர்கள் அப்படிப்பட்ட தோணியை அல்லது மரக்கலத்தைப் போய்ப்பிடித்து வழக்கு வைக்கிறதற்காக இத்தீவிலுள்ள வசதியான துறைமுகத்துக்கு அல்லது இடத்துக்குக் அதைக் கொண்டுபோதல் நியாய முறையாகும். அப்படிப்பட்ட ஒவ்வொரு தோணியும், மரக்கலமும் போதிய அளவு அரசிறைவருமான நியாயாதிகாரம் உடைய எந்த நியாயஸ்தலத்தின் தீர்ப்பினாலும் பறிமுதலாக்கப்படலாமென்று இத்தால் வெளிப்படுத்தப்படுவதுமன்றி, அத்தோணி அல்லது மரக்கலம் தற்செயலாய் அல்லது வேறு இன்றியமையாத காரணத்தினால்—இதை அத்தாட்சிப்படுத்துவது இவ்வித பிரதிவாதத்தைக் கூறுகிறவர்களைப் பொருத்ததாகும்—மேற்சொல்லிய ஸ்தானத்தில் இருக்கவேண்டி வந்தாலொழிய அவ்விதம் தண்டனை விதிக்கவும் படலாம். இங்ஙனம் பறிமுதல் செய்யப்பட்டதில் மூன்றில் இரண்டு பங்கு மகத்துவந்தங்கிய இராசாவினுடைய உபயோகத்துக்கும் மூன்றில் ஒருபங்கு பிடிக்கும் அல்லது வழக்குவைக்கும் ஆட்களுக்குமாம்.

### இடாப்பு.

உள் பக்கமாய் அல்லது கரையோரமாய் ஓடும் மரக்கலங்கள் நாலு பாகத்துக்குமேல் ஆளமான தண்ணீரில் வட்டமிட்டோட அல்லது நங்கூரம் போடக்கூடாது.

வெளிப்பக்கமாய் ஓடும் மரக்கலங்கள் 12 பாகத்துக்குக் குறைந்த ஆளமான தண்ணீரில் வட்டமிட்டோட அல்லது நங்கூரம் போடக்கூடாது.

1811 ம் ஹூ பங்குனிமீ 9 ந் திகதி.

குறிக்கப்பட்ட சில எல்லைகளுக்குள் குறிக்கப்பட்ட சில வலைகளையும் கருவிகளையும் வைத்திருத்தல் சட்ட விரோதமானதென்று எடுத்துக்கூறும் 1843 ம் ஆண்டின் 18 ம் இலக்கக் கட்டளைச்சட்டம்.

மகத்துவந்தங்கிய இராணி அவர்களின் முத்துச் சிப்பிப்பார்களுக்குச் சேதம் வருவிக்கத்தக்கதாய் உபயோகிக்கப் படக் கூடியதான குறிக்கப்பட்ட சில வலைகளையும் கருவிகளையும் குறிக்கப்பட்ட சில எல்லைகளுக்குள் வைத்திருத்தலை விலக்குதல் ஆவசியகமாயிருக்கிறபடியால்.

1. கடலில் நடந்து மீன் பிடிப்பவர்களால் உபயோகிக்கப்படும் வலையல்லாத எந்த வளிவலையை அல்லது வேறு வலையைத் தரையில் வைத்திருத்தலும் அல்லது எந்த ட்றெஜ் (சிப்பிவாரும் வலை) அல்லது அதுபோன்ற கருவியை தளவில்லு அல்லது தலைமன்னாரிலிருந்து பன்னிரண்டு கட்டைக் குட்பட்ட எந்த இடத்திலும் அல்லது தளவில்லுக்கும் தலைமன்னாருக்கும் இடையிலுள்ள கடற்கரையின் வற்றுவேலை எல்லையின் எந்தப் பகுதியிலிருந்தும் 12 கட்டைக் குட் பட்ட எந்த இடத்திலும் வைத்திருத்தலும் சட்டவிரோதமாகும். அவ்வெல்லைக்குள் எப்பொழுதாகுதல் காணப்படும் அப் படிப்பட்ட ஒவ்வொரு வலையும் ட்றெட்ஜ் உம் அல்லது கருவியும் பறிமுதலாக்கப்படும். எப்பொழுதாகுதல் அப்படிப் பட்ட வலை, ட்றெஜ், அல்லது கருவியைத் தன்சுவாதீனத்தில் வைத்திருக்கிற அல்லது அப்படிப்பட்ட எந்த வலை, ட்றெஜ், அல்லது கருவியை அவ்வெல்லைக்குள் இருந்த இடத்திலிருந்து கொண்டுபோன அல்லது மறைத்துவைத்த அல்லது கொண்டுபோக அல்லது மறைத்துவைக்க உதவிபண்ணின அல்லது அப்படியாகச் செய்வித்துக்கொண்ட ஒவ்வொரு வனும் குற்றஞ்செய்தவனாவான்; அங்ஙனம் குற்றவாளியாகக் காணப்பட்டால் பத்துபவுணுக்கு மேற்படாத தெண்ட மிறுக்க அல்லது 6 மாத காலத்துக்கு மேற்படாத எவ்வளவு காலத்துக்கும் கடூழிய அல்லது கடூழிய மில்லாத மறிய லிருக்கப் பாத்திரனாவான்.

2. மேற்சொல்லியபடி அப்படிப்பட்ட எந்தவலை, ட்றெஜ், அல்லது கருவி வைக்கப்பட்டு அல்லது மறைக்கப் பட்டிருக்கிறதென்று நம்புகிறதற்கு நல்ல நியாயமிருந்தால் ஒவ்வொரு ரேகு உத்தியோகஸ்தனும் ஒவ்வொரு சமாதான உத்தியோகஸ்தனும் மேற்சொல்லப்பட்ட எல்லைக்குள்ளிருக்கும் எந்த வீட்டையும், வளவையும் சோதனைபண்ணுகிற தும், அவருடைய பொறுப்பில் அச்சாமான்களை எடுக்கிறதும், இக்கட்டளைச்சட்டத்துக்கு விரோதமாகக் குற்றஞ்செய்யும் ஒவ்வொருவரையும் பிடித்து நியாயப்பிரமாணத்தின்படி நடத்தப்படும்படி தக்க எந்த நியாயஸ்தலத்துக்கு அல்லது சமா தான நீதவானுக்கு முன் கொண்டுபோவதும் நியாயப்பிரமாணத்தோடொத்ததாகும்.

1843 ம் ஆ நவம்பர் (கார்த்திகை)மீ 30 ந் திகதி.

---

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஒரு பக்கத்தில் இடம்விட்டு) ஓறணையில் ஓர் புதிய ருேட்டுத் திறப்பதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 18 444. குறிச்சி—ஓறணை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஈரியககும்புற .. | வயல் .. | பிலிப்பன நாச்சாரியும் மறுபேரும் .. | 0 | 0 | 2 |
| 2 | ரூலகாமிகேவத்தை அல்லது ஈரியககும்புறஅத்மக | தென்னந்தோட்டம் .. | ஷை .. .. | 0 | 0 | 1·63 |
| 3 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 0 | 8·82 |
| 4 | ஈரியககும்புற | வயல் .. | ஷை .. .. | 0 | 0 | 0·86 |
| 5 | ரூலகாமிகேவத்தை .. | தென்னந்தோட்டம் .. | பொருேலிஸ் பெரேராவும் மறுபேரும் .. | 0 | 0 | 20 61 |
| 6 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 1 | 31·10 |
| 7 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 0 | 28·36 |
| 8 | ஷை .. | தென்னையும் மபரும் கொண்ட தோட்டம் | ஷை .. .. | 1 | 3 | 18 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரி வின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ௵ நவம்பர் மாசம் 3 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு ஓறணைத் தானையத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்து களின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1924 ம் ௵ செப்டெம்பர்மீ 16 ௳.

எச். ஏ. பேர்டன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அங்குண—வதுளை கவுண்மேந்துப் பள்ளிக் கூடத்துக்குப் போகிற பாதைக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 12,578. குறிச்சி—நாறங்கல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | உனுபனேமுலன .. | நெல்வயல் .. | மாத்துறையில்யிருக்கும் எஸ். ஏ. ஸீ. ஏ ஸ்மிடீன் | 0 | 0 | 12 |

எடுத்துககொளவதறகான எததனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-ததுக காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனககுக் கற்பனைசெய்திருப்பதனுல். அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஸ்ரீ ஐப்பசி மாசம் 24 ந் தேதியிலன்று காலே 10 மணிக்கு மாத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அககாணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறைக் கச்சேரி,
1924 ம் ஸ்ரீ பிரட்டாதிமீ 16 ந் உ.

ஜீ. எஸ். வூட்மென்,
உப அரசாட்சி ஏசண்டு.

---

### உரிமைபெறும் யாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இலக்கம் 8,663, அனுராசபுரம்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1924 ம் ஸ்ரீ (செப்டம்பர்) புரட்டாதிமீ 19 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எல். எல். கன்ரர் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந்தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதன்வற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எல். எல். கன்ரர்,
விசேஷ உத்தியோகத்தர்.

(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் ரெஜிசர்) காணி நிர்ணய உத்தியோகர்த்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சேர்வயர் ஜனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) குறிப்பு—இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அககாணிகளுக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமத்திய மாகாணம் கலகம்பலாத்த மாமினியக் கோறளை கறுக்கன்குலமதுலான மயிலகஸ்வெவக் கிராமத்திலிருக்கும் கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள் :—

இலங்கை யழவைப் பிரதமபடம் 907.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 1 | மயிலகஸ்வெவ (குளமும் கட்டும்) | 30 | 1 | 23 |
| 2 | காற்பாதை | 0 | 0 | 23 |
| 3 | கோங்காகேன, கல்கந்தேயாய, ருமேகாவயாய | 15 | 3 | 25 |
| 4 | மயிலகாகேன, மாறகாகேன, கல்கந்தேயாய, கும்புக்காகேன, மயிலகஸ்வெவுகெலே | 72 | 1 | 30 |
| 5 | பெரிய ரோட்டு | 2 | 0 | 34 |
| 6 | கும்புக்காகேன (கட்டுச் சேமிப்பு) | 0 | 3 | 0 |
| 7 | கொரோவ் எல | 0 | 0 | 4 |
| 8 | மயிலகாகேன (கட்டும் ரோட்டும் சேமிப்பு) | 3 | 0 | 8 |
| 9 | மயிலகாபிற்றிய (கட்டுச் சேமிப்பு) | 0 | 1 | 18 |
| 10 | கோங்காஅக்கறே | 3 | 1 | 37 |
| 11 | கொலனகாகேன (இடுகாட்டுக்கு வளிச்சேமிப்பு) | 0 | 0 | 27 |
| 12 | கோங்காஅக்கறே | 4 | 3 | 9 |
| 13 | மகாயாய, நுககாகேன | 0 | 3 | 15 |
| 14 | கரத்தப்பாதை | 0 | 1 | 0 |
| 15 | தம்பகாபிற்றிய (கரத்தப்பாதைச் சேமிப்பு) | 0 | 0 | 38 |
| 16 | மயிலகாபிறறிய (பெரிய ரோட்டுச் சேமிப்பு) | 0 | 0 | 30 |
| 17 | குறிமாறகாஅக்கறே | 1 | 3 | 18 |
| 18 | தம்பககாஅக்கறே | 3 | 0 | 38 |
| 19 | குடாவெவ (குளமும் கட்டும்) | 10 | 0 | 19 |
| 20 | மயிலகாபிற்றிய (பெரிய ரோட்டுச் சேமிப்பு) | 0 | 1 | 7 |
| 21 | தல்காகேன, பப்புகேகேன | 3 | 1 | 38 |
| 22 | கோங்காகேன, அகுகாகேன், தல்காகேன, பாலுகாகேன, மடன்காகேன | 23 | 2 | 10 |
| 23 | மீகாபிற்றிய, குடாவெவபகல (கட்டுச் சேமிப்பு) | 1 | 0 | 31 |
| 24 | கொரோவ் எல | 0 | 0 | 4 |
| 25 | மீகாகும்புற | 0 | 0 | 10 |
| 27 | மாறகாஅக்கறே | 2 | 1 | 37 |
| 28 | தல்காகேன, குறிமாறகாகேன, மீகாகேன, பாலுகாகேன | 8 | 2 | 9 |
| 30 | தெலம்பியகமவெவ (குளம்) | 0 | 2 | 33 |
| | | 190 | 3 | 15 |

எல்லைகளாவன : வடக்கு-செஸ்திறவெல்லியக் கிராம எல்லை (கட்டு), செஸ்திறவெல்லியக் கிராம எல்லை; கிழக்கு-பணிக்கன்குலமக் கிராம எல்லை, நிக்கினியாவக் கிராம எல்லை; தெற்கு-தெலம்பியகமக் கிராம எல்லை; மேற்கு-செஸ்திறவெல்லியக் கிராம எல்லை

கவனிப்பு.—மேற்குறித்த எல்லைகளுக்குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டுக ளிவ்வறிவித்தலினின்று விலக்கப்பட்டிருக்கின்றன வென்பதையு மவைகளின் விசாலத் தொகையாகும் 16 ஏக்கர் 3 றூட் 10 பேட்சும் மேற் சொல்லிய 190 ஏககர் 3 றூட் 15 பேட்சுக்குள்ளு மடங்கவில்லை என்பதையுங் கவனிக்க வேண்டியது :—

இலங்கை யழவைப் பிரதமபடம் 907.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப |
|---|---|---|---|
| A 26 | .. | தம்பகாகும்புற .. .. .. .. | 0 0 14 |
| A 29 | .. | சியம்பலகாஅக்கறே, சியம்பலகாகும்புற. மீகாபிற்றிய, சியம்பலகாபிற்றிய, 186,836 ம் உ. ப. ல். காணுங் காணி .. .. .. | 16 0 14 |
| A 31 | .. | சியம்பலகாகும்புற .. .. .. .. | 0 2 22 |
| | | [அநுராசபுர வி. உ. 23—1924.] | 16 3 10 |

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

வருகிற 1925 ம் ஆண்டு தைமாதம் 1 ந் திகதி தொடக்கம் ஒரு வருஷத்திற்கு "கரத்தை மாடுகள் கொடுப்பதற்கு" என்று என்வலோப்பில் எழுதப்பட்டு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரம் 1924 ம் ஆண்டு ஐப்பசிமாதம் 6 ந் திகதி திங்கட்கிழமை பகல் 12 மணி வரையிலும் அநுராசபுர லோக்கல்போட் அக்கிராசனர் ஏற்றுக்கொள்ளுவார்.

2 குப்பை கூளம் அள்ளுவதற்கு 5 கரத்தைகளும் 5 சோடி மாடுகளும், கக்கூஸ் கரத்தைகளுக்கு 5 சோடி மாடுகள் கொடுப்பதற்காக் கேள்விப்பத்திர மிருக்கவேண்டும். (கக்கூஸ் கரத்தைகள் லோக்கல்போட்டால் கொடுபடும்).

3. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரன் இக்கொந்திறாத்தை சரியாய் நிறைவேற்றுவதற்காக 500 ரூபாய் பணப் பிணை கட்டவேண்டும்.

4. அக்கிராசனர் குறைந்த அல்லது எந்தக் கேள்வியை யாவது ஏற்றுக்கொள்ளும் கட்டுபபாடு செய்துகொள்ள வில்லை.

5. இதைப்பற்றிய விபரங்கள் லோக்கல்போட் கந்தோரில் கேட்டறிந்துகொள்ளலாம்.

6. ஒவ்வொரு கேள்விக்காரனும் ரூபா 50 பணப்பிணை கட்டவேண்டும் அல்லாவிட்டால் கேள்விப்பத்திரம் அங்கீகரிக்கப்படமாட்டாது.

ஏ. டப்ளியூ. சேமூர்,
லோக்கல்போட் அக்கிராசனர்.

லோக்கல்போட் கந்தோர்,
அநுராசபுரம், 1924 ம் ஆண்டு புரட்டாதி௴ 8 ௳.

## குத்தகை விற்பனவு அறிவித்தல்.

இத்தாற் சகலரும் அறியவேண்டியது 1924 ம் ஆண்டு ஐப்பசிமாதம் 6 ந் திகதி திங்கட்கிழமை பகல் 1·30 மணிக்கு இதன் பின்னுற் குறிக்கப்படும் குத்தகைகளை 1925 ம் ஆண்டுக்காக அநுராசபுரக் கச்சேரியில் லோக்கல்போட் அக்கிராசனரால் பிரசித்த ஏலத்திற் கூறி விற்கப்படும் :—

(1) மார்க்கற் குத்தகை. | (2) காலை குத்தகை. | (3) புல்லுக் குத்தகை.

லோக்கல்போட் ஆபிஸ்,
1924 ம் ௵ புரட்டாதி௴ 8 ௳.

ஏ. டப்ளியூ. சேமூர்,
அக்கிராசனர்.

## சுப்பிறீங்கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங்கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங்கோட்டாரால் மேற்குபிரிவின் டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1924 ம் ஆண்டு ஒகருேபர் மாதம் 10 ந் திகதியாகிய வெள்ளிக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகரும முள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

கொழும்பு பிஸ்கால் கந்தோர்,
1924 ம் ஆண்டு செப்டெம்பர்௴ 11 ௳.

ஈ. எச். டேவிஸ்,
மேல்மாகாண பிஸ்காலுக்காக.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங்கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங்கோட்டாரால் சிலாபம், புத்தளம் டிஸ்திறிக்குகளைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1924 ம் ஆண்டு ஒக்ருேபர்மாதம் 10 ந் திகதியாகிய வெள்ளிக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

குருநாக்கல் பிஸ்கால் கந்தோர்,
1924 ம் ௵ செப்டம்பர்௴ 12 ௳.

எஸ். டி. சமறசிங்க,
பிஸ்காலுக்காக.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங்கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் இரத்தினபுரி டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1924 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10 ந் திகதியாகிய வெள்ளிக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இரத்தினபுரி பிஸ்கால் கந்தோர்,
1924 ம் ௵ புரட்டாதி௴ 12 ௳.

8548

ஜீ. எவ். ஆர். பிறவுணிங்,
பிஸ்கால்.

A. C. RICHARDS, ACTING GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.